පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION
14 ஆம் மாடி, சுகுறுபாய,
பத்தரமுல்லை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දිනය திகதி Date | 23.12.2024 நேரம் 14.50 மணி | දුරකථන தொலைபேசி Telephone | 011-2887973 | මගේ අංකය எனது இலக்கம் My No | D/Media/out/ 1877/2024 | ඊ මේල් மின்னஞ்சல் E-mail | dir.media@police.gov.lk |

## 2024 நத்தார் பண்டிகை மற்றும் 2025 புது வருடப் பிறப்பு காலங்களில் பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து கடமைகளில் பொலிசாரை ஈடுபடுத்தல்.

2024 நத்தார் பண்டிகை மற்றும் 2025 புது வருடப் பிறப்பு கொண்டாடங்களுக்காக பெருந்திரளான மக்கள் பிரதான நகரங்கள் மற்றும் புறநகரப் பகுதிகளுக்கு வருகைத்தருவார்கள். நத்தார் பண்டிகையின் போது கத்தோலிக்க தேவாலயங்களில் நடாத்தப்படும் விசேட ஆராதனைகளில் கலந்து கொள்வதற்காக அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் வருகைத்தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு வருகைத்தரும் பொது மக்கள் மற்றும் பக்தர்களின் பாதுகாப்பிற்காகவும், போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காகவும் நாடு பூராகவும் உள்ளடக்கும் வகையில் பண்டிகைக் காலத்தில் பொது மக்கள் அதிகாமாக வருகைத் தரும் தேவாலயங்கள், வியாபார நிலையங்கள் மற்றும் பொது இடங்களை மையப்படுத்தி 40000 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இலங்கை பொலிசாரால் விஷேடமாக கொழும்பு நகரத்தை மையப்படுத்தி மேலும் மேல் மாகாணத்திலுள்ள பொது இடங்களின் பாதுகாப்புகள் மற்றும் போக்குவரத்து திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், பண்டிகைக் காலங்களில் போக்குவரத்து கடமைக்காக 600 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் 553 பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக 6500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்துவதற்காக பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் போது பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் 500 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் சீருடைக்கு பதிலாக சிவில் உடைகளில் கடமையில் ஈடுபடுத்தவும் புலனாய்வுப் பிரிவினரும் கடமைகளில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இக் கடமைகளுக்காக 48 பொலிஸ் உயர் அதிகாரிகளும், 769 பொலிஸ் பரிசோதகர்கள் நிலையிலுள்ள உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பகல் மற்றும் இரவு நேரங்களில் புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி தகவல்களைப் பெற்றுக் கொண்டு மக்கள் அதிகமாக நடமாடும் பிரதேசங்களில் சுற்றித்திரியும் திருடர்கள் மற்றும் ஏனைய குற்றவாளிகளை உடனடியாக கைது செய்வதற்கான முறைமையும் நடைமுறையில் உள்ளது.

பண்டிகைக் காலங்களில் தங்களின் தேவைகளுக்காக பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகள் உரிய போக்குவரத்து விதிமுறைகளை அவதானத்துடன் கடைபிடிக்குமாறு பொலிசார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

**பொலிஸ் ஊடகப் பிரிவு**